REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 22உ திங்கள் (4—4—55) ★ ★ வெளியூர்: பங்குனி 23உ செவ்வாய் (5—4—55) [இதழ் 250

பொறுப்பைத் தட்டிக்கழிக்கிறார் தேபர்!

பஞ்சாப் மாநில மந்திரி ஜெயின்மீது சாட்டப்பட்டுள்ள இலஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதில் காங்கிரஸ் தலைமை தலையிடாதென்று, காங்கிரஸ் தலைவர் தேபர் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநில முதன் மந்திரி சச்சார் மந்திரி ஜெயின் மீதுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்கப் போதுமான தகுதியானவரே என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரே மாதிரியான இரு நிறுவனங்கள், ஒரே நேரத்தில், மந்திரிமீதுள்ள இலஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிக்கத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

இதற்கிடையில் எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர், குற்றச்சாட்டுப் பட்டியல் ஒன்றை தேபரிடம் தந்துள்ளாராம்.

இந்தியப் பேரரசுக்கு எச்சரிக்கை!

வெளிநாட்டுத் துணி இறக்குமதியின் எதிரொலி

20,000 தொழிலாளர் ஒரு வாரம் வேலையற்றிருப்பர்

50,000 கதிர்கள் சோம்பிக்கிடக்குமாம்!

லங்காஷயர் பருத்தித் துணி ஆலைகள் பல, ஈஸ்டர் வாரம் முழுவதும் மூடப்படும் என்று கூறப்படுகிறது.

மிதமிஞ்சிய வெளிநாட்டுத் துணி இறக்குமதியின் விளைவாகவே இந்த 'மூடு விழா' நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஆலை முதலாளிகள் சங்கம், இந்த வாரத்தில் சுமார் 18 முதல் 20 ஆயிரம் தொழிலாளர்கள்வரை வேலையின்றி இருக்க நேரிடும் என்றும், சுமார் 117 நெசவு ஆலைகளில் 50,000 கதிர்கள் சோம்பிக்கிடக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

இன்றுமுதல் அடுத்த திங்கட்கிழமை வரை மீண்டும் ஆலைகள் திறக்கப்படமாட்டாது என்றும் சங்கம் கூறுகிறது.

இந்த நிலைமை அதிகமான வெளிநாட்டுத் துணி இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் பணியினை சர்க்கார் துரிதமாக மேற்கொள்ளச் செய்யும் என்று சங்கத் தலைவர்கள் நம்புகின்றனராம்.

1954—55-ம் ஆண்டில் இந்தியாவில் உற்பத்தியான காதியின் மொத்தமதிப்பு சுமார் ரூ. 3 கோடி ஆகும்.

மொழிவழி மாநிலம் கோரி மக்கள் கிளர்ச்சி

நாடு முழுவதும் துவங்கப்படும்?

மூன்றுவது மொழிவழி மாநில அமைப்பு மாநாட்டுத் தீர்மானம்

அம்பாலா, ஏப்ரல் 3—

"இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக, இந்தியா ஒரே இயல்பான, மொழிவழி மாநிலங்களாகப் பிரித்து அமைக்கப்படும் என்று இந்தியப் பேரரசு அறிவித்தாக வேண்டும்; சர்க்கார், இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவிடில், தகுந்த நடவடிக்கைகளை மொழிவழி மாநில அமைப்பு மாநாட்டுக் குழு மேற்கொள்ள வேண்டும்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

மாநில புனரமைப்புக் குழு உறுப்பினர் சிலரின் நல்லெண்ணத்தில் திருப்தி இல்லை

"மாநில புனரமைப்புக் குழு உறுப்பினர்கள் சிலரின் நல்லெண்ணத்திலே எனக்கு திருப்தியில்லை; அவர்கள், குழுவில் இடம் பெறும் முன்னரும் பின்னரும் வெளியிட்டுள்ள சில கருத்துக்கள், அவர்களால் விசாரணையை பாரபட்சமற்ற தன்மையில் நீதியுடன் நடத்த முடியும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதைத் தெளிவாக்குகின்றன. மேலும், மாநில புனரமைப்புக் குழுவின் விசாரணை நிபந்தனைகள் சிலவும் எனக்கு திருப்தியைத் தரவில்லை"

—என்று மூன்றுவது அகில இந்திய, மொழிவழி மாநில அமைப்பு மாநாட்டிற்குத் தலைமை வகித்த டாக்டர் லங்காசுந்தரம் குறிப்பிட்டிருக்கிறார்.

கி. பாகிஸ்தானில் புயல்

200 வீடுகள் நாசம்; 1,700 குடும்பங்கள் தவிப்பு

சர்க்காரின் அவசர உதவி

டாக்கா, ஏப். 2—

கிழக்கு பாகிஸ்தானில் வீசிய கடும் புயலால், 18 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 1,700 குடும்பங்கள் பாதிக்கப்பட்டனவாம்; 200வீடுகள் நாசமடைந்தனவாம்; 100 பேருக்கு மேல் காயமடைந்தனராம். எவர் உயிருக்கும் சேதம் ஏதும் இல்லை என்றாலும், கால்நடைகள் சில சேதமுற்றன என்று தெரியவருகிறது.

மாநில சர்க்கார் புயல் நிவாரணத்திற்கென சுமார் ரூ. 38 ஆயிரம் செலவிட அனுமதித்துள்ளதாம்.

புதுடில்லி ஒப்பந்தத்திற்கு 600 ஆசிரியர்கள் பலி!

இலங்கை முழுமையிலுமுள்ள 600 இந்தியஆசிரியர்களை நீக்கிவிட்டு அவர்களுக்குப் பதிலாக இலங்கையர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவாம். இந்திய ஆசிரியர்களின் குடியிருப்புப் 'பர்மிட்'டுகளைப் புதுப்பிக்க வேண்டாம் என்றும் இலங்கை சர்க்கார், குடியேற்ற இலாகாவிற்கு உத்தரவிட்டுள்ளதாம்!

இலங்கையில் வேலை பார்க்கும் இந்திய ஆசிரியர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்தில்தான் இருக்கின்றனர். அவர்களில் அனேகமாக எல்லோருமே விஞ்ஞான பட்டதாரிகளாம். யாழ்ப்பாண பள்ளிக்கூடங்களின் நிர்வாகிகள் எல்லாரும் விஞ்ஞான பாடங்களைப் போதிக்கத் தகுதி வாய்ந்த இலங்கையர்கள் போதிய அளவுக்குக் கிடைக்கவில்லை' என்று கூறி இலங்கை சர்க்காரின் நடவடிக்கையை ஆட்சேபித்துள்ளனராம்.

மீனவர்களுக்கும் சீட்டு

மன்னார் வளைகுடாவில், தற்போது இலங்கையின் கரையோரங்களில் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள 500 இந்தியர்களான மீன் பிடிப்போருக்குப் பதிலாக இலங்கையைச் சேர்ந்த செம்படவர்களை நியமிக்க வேண்டுமெனும் திட்டம் ஒன்றை இந்திய—இலங்கை விவகாரத் தொடர்பு அதிகாரி இலங்கை அரசாங்க மீன் இலாகாவிற்கு சமர்ப்பித்திருக்கிறாராம்.

தற்போது அங்கு இருந்துவரும் இந்திய செம்படவர்கள் குறைவாகக் கூலி பெற்றுவருதால், இலங்கையைச் சேர்ந்த மீன்பிடி முதலாளிகள் அவர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டுள்ளனர்.

நீடிக்கப்படுகிறது!

சென்னை, ஏப். 4—

மரவள்ளி மாவு, கூழ்போன்றவை உட்பட்ட மரவள்ளிக் கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் எல்லா பண்டங்களையும், எந்தவிதமான அளவுக் கட்டுப்பாடுகளும் இல்லாமல், யார் வேண்டுமானாலும் ஏற்றுமதி செய்வதற்கான காலவரையறை ஜூன் மாதம்வரை நீடிக்கப்பட்டுள்ளதெனத் தெரியவருகிறது.

தலைமைக் கழகம்: அறிக்கை—8/55

தி. மு. கழக மாவட்டக் கிளைத் தேர்தல்

மாவட்டம்	தேர்தல் நாள்	நேரம்	இடம்	தேர்தல் ஆணையாளர்
செங்கற்பட்டு	10—4—55	மாலை 2½ மணி	'திராவிட நாடு' அலுவலகம், காஞ்சிபுரம்	அ. பொன்னம்பலனார்
வட ஆற்காடு	10—4—55	மாலை 2 மணி	தி. மு. கழக அலுவலகம், ஆம்பூர்	என். வி. நடராசன்
தஞ்சை	10—4—55	காலை 10 மணி	முசாபுரி பங்களா, மாயவரம்	சத்தியவாணிமுத்து
மதுரை	10—4—55	மாலை 3 மணி	விக்டோரியா எட்வர்டு ஹால், மதுரை	இரா. நெடுஞ்செழியன்
இராமனுதபுரம்	10—4—55	மாலை 3 மணி	நாடார் பரிபாலன சங்கம், விருதுநகர்	தில்லை வில்லாளன்
நெல்லை	10—4—55	காலை 10 மணி	தி.மு. கழக அலுவலகம், கண்ணம்மன் கோயில் தெரு, நெல்லைச் சந்திப்பு	ஏ. பி. தருமலிங்கம்
சென்னை	17—4—55	காலை 9 மணி	'அறிவகம்', இராயபுரம், சென்னை—13	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
தென் ஆற்காடு	17—4—55	மாலை 3 மணி	அமராவதி பங்களா (தபால் நிலையத்துக்கு அருகில்) நெல்லிக்குப்பம்	எம். எஸ். இராமசாமி
சேலம்	17—4—55	காலை 10 மணி	'சாந்தி நிகேதன்', கோயமுத்தூர் லாட்ஜ், சேலம்	காஞ்சி-கல்யாணசுந்தரம்
கோவை	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், கடை வீதி, ஈரோடு	மதுரை எஸ். முத்து
திருச்சி	17—4—55	காலை 10 மணி	'கருணாநிதி பார்க்', என். எஸ். பங்களா, திருச்சிராப்பள்ளி	என். எஸ். இளங்கோ
நாஞ்சில்	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், வடசேரி, நாகர்கோயில்	சி. பி. சிற்றரசு

"அறிவகம்", சென்னை
4—4—'55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை
சென்னை 4—4—'55 திங்கள்

எங்கே ஜனநாயகப் பண்பு?

அங்கீகரிக்கப்பட்ட செய்திப் படங்களை, கட்டாயமாக எல்லா சினிமா அரங்கங்களிலும் திரையிட வேண்டும் என்ற விதி ஒன்றை உள்ளடக்கிய 'சினிமா கட்டுப்பாடு சட்டம்,' ஒன்று, சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பல்வேறு அம்சங்களும், விதிகளும் கொண்ட அந்தச் சட்டம், பொறுக்குக் குழுவின் மாற்றங்களில் சிறு திருத்தங்களுடன் நிறைவேறியிருக்கிறது.

சட்டத்தின் பொதுவான எல்லா அம்சங்கள் குறித்தும் பிறதோர் சமயம் கூறுவோம். இப்போது சட்டத்தில் ஒரு அம்சமாக உள்ள செய்திப் படங்களை எல்லா சினிமா அரங்கங்களிலும் கட்டாயம் திரையிட வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளதைப் பற்றி மட்டும் நமது கருத்தை வெளியிடுகிறோம்.

சினிமா, காலை முதல் மாலை வரை உழைத்து அலுத்தவர்களுக்கு—அலைபாயும் நொந்த உள்ளத்தவருக்கு சோர்வு நீக்கும்—கவலையகற்றும் ஒரு நல்ல பொழுது போக்காக மட்டுமோ, அல்லது கலையம்சங்களின் பிரதிபலிப்பாகமட்டுமோ இருத்தலாகாது; தங்களையும் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தையும் பற்றிய நல்ல பல கருத்துக்களை ஊட்டுவதாகவும், மக்களின் பொது அறிவை வளர்த்து, வாழ்க்கையைப் பண்படுத்திக் கொண்டு முழு மனிதர்களாக அவர்கள் வாழக் கற்றுத் தருவதாகவும், சினிமா இருக்க முடியும்—இருக்க வேண்டும் என்பது, சினிமாவைப் பற்றிய நமது பொதுவான கருத்துக்களுள் ஒன்றாகும்.

குறிப்பாக, செய்திப் படங்கள், நாட்டு நடப்பு, உலகத்தின் போக்கு ஆகியவை பற்றி மட்டுமல்லாது, இந்தியத் துணைக்கண்டத்தைப் போன்ற நூற்றுக்கு எழுபதுக்கும் அதிகமானோர் கல்வியறிவு அற்ற நிலையிலிருக்கும் மக்களைக் கொண்ட ஒரு பின்தங்கிய பூபாகத்தின் மக்கள் வேகமாக முன்னேற்றப்பாதையில் ஓடிக்கொண்டிருக்கும் உலகத்துடன் பின்னால் நடந்து செல்லக்கூடிய அளவிலாவது, அவர்களின் பொது அறிவு வளர்ச்சிக்கானகருத்துக்களைப் பரப்புவனவாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகுமென்று நாம் கருதுகிறோம்.

ஆனால், இந்தியத் துணைக் கண்டத்தினின்றும், வெள்ளையர் வெளியேறிய நாளிலிருந்து, கடந்த ஏழரை ஆண்டுக் காலமாக இந்தியப் பேரரசால் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டு, வெளியிடப்பட்டுள்ள எண்ணற்ற செய்திப் படங்கள், எந்த அளவு மக்களின் பொது அறிவு வளர்ச்சிக்குப் பயன் பட்டன என்பதைத் தெரிந்து கொள்ள ஆராய்ச்சி தேவை இல்லை.

அமெரிக்காவிலே பண்டிதர் வரவேற்கப்படும் காட்சி—அவருக்கு அமெரிக்க இராணுவம் தந்த அணிவகுப்பு மரியாதை—இராஜாங்க விருந்திலே பண்டிதர்—பிரயாணம் செய்கையில் அவர் அணிந்த அழகு உடை—அமெரிக்காவின் வானளாவிய மாளிகைகளினூடே பண்டிதர் உல்லாச பவனி வரும் மிடுக்குகளையும்;

இந்தோனேஷியாவில் டாக்டர் சுகர்ணோவுடன் பண்டித நேரு கைகுலுக்கும் காட்சி—செஞ்சீனாவின் தலைவர் மா-சே-துங்குடன் மனம் விட்டுப் பேசிய மாட்சிகளையும்;

ஐ. நா. சபைத் தலைவியான திருமதி விஜயலட்சுமியை ஜினிவாவில் வி. கே. மேனன் விமான நிலையத்தில் வரவேற்கும் பாணிகளையும், லண்டனில் தரப்பட்ட இங்கிதமான விருந்தின் எழில் தோற்றங்களையும்;

கல்கத்தா அடுத்த கல்யாணியிலும், சென்னைக்கு அருகிலுள்ள ஆவடியிலும் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடுகளில் ஆசிய விடுதலை குறித்து ஆவேசமாகப் பண்டிதர் பேசிக்கொண்டிருந்த 'பாவனை'களையும்;

'பக்ரா - நங்கல்' போன்ற 'பகீரத' சாதனைகளையும்தான் படமாக்கிக் காட்டினார்களே தவிர—இந்தியத் துணைக் கண்டம், பண்டிதரின் தலைமையில் இயங்கும்காங்கிரஸ் ஆட்சியால் வெளி உலகில் பெற்ற போலி பெருமைகளையும், உள்நாட்டில் தாங்கள் சாதித்தவற்றையும் பிரச்சாரம் செய்யவும்தான் செய்திப் படங்களைக் கருவியாக்கிக் கொண்டார்களே தவிர, உலகத்தில் வளர்ந்துள்ள விஞ்ஞானம், உலகத்தில் வாழும் பல்வேறு நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை, முறை, பண்பு, மனப்போக்கு—ஆகியவை போன்ற பொது அறிவு வளர்ச்சிக்கான கருத்துக்களை மக்களுக்குத் தர இதுவரை அவற்றைப் பயன் படுத்தவில்லை.

நாட்டு நடப்புகளை—அரசாங்கத்தின் சாதனைகளை மக்கள் அறிந்துகொள்ள, அரசாங்கத்திற்கும்—மக்களுக்குமான தொடர்பு உண்டுபண்ணும் சாதனமாக செய்திப் படங்கள் இருப்பதில் தவறில்லைதான்; ஆனால், அவைமட்டுமே செய்திப் படங்களால் மக்கள் பெறக்கூடிய—பெற வேண்டிய முழுப் பலன்கள் என்று கூறிவிட முடியாது.

மேலும், நாட்டு நடப்பு என்று கூறும்போது, ஒரு ஜனநாயக நாட்டில், மக்களின் பிரதிநிதித்துவமுடைய எல்லாக் கட்சியினரின் நடவடிக்கைகளும் செய்திப் படங்களாக்கப் பட்டு மக்களுக்குக் காட்டப்பட வேண்டுவதுதான் நியாயமாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்த வரையில், ஆட்சியில் அமர்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் போக்கு, செய்திச் சினிமாப் படத்துறையில் மட்டுமின்றி வேறெல்லாத் துறைகளிலுமே ஜனநாயக வளர்ச்சியில் அக்கரை கொண்டதாக இல்லை என்பதை குருடரும் உணர்வர்.

ஜனநாயகம் என்பதே—நாம் அடிக்கடி எடுத்துக் காட்டியிருப்பதைப் போல, ஆட்சியில் அமர்ந்திருக்கும் ஒரு கட்சியின் எதேச்சாதிகாரப் போக்கைக் கட்டுப்படுத்தவும், அதிகாரத்தில் இருப்பவர்கள் அளவு கடந்து செல்லாமல் கண்காணிக்கவும் ஒரு நல்ல எதிர்க் கட்சி இருந்தாக வேண்டும் என்ற நடைமுறையைக் கொண்டிருக்க வேண்டும். அந்த எதிர்க்கட்சி, மக்கள் விரும்பும்போது தலைமை பூண்டு, ஆட்சிப் பொறுப்பேற்கக்கூடிய அளவு வளர்ந்ததாகவும் இருக்க வேண்டும்.

'ஜனநாயகம்' எனும் பண்பு, நடைபயில்கிற நிலையிலிருக்கும் இந்தியத் துணைக் கண்டத்தில், சந்தர்ப்பவசத்தால் ஆட்சிப் பொறுப்பேற்கும் வாய்ப்புப் பெற்றிருக்கும் காங்கிரஸ், ஜனநாயகம் நன்கு வளர, நல்ல ஒரு உருவான எதிர்க்கட்சியின் வளர்ச்சிக்கும் ஆக்கந்தேடியிருக்க வேண்டியது தேவையான—நாகரீக மிக்க ஒன்றாகும்; ஆனால், அதைச் செய்ய காங்கிரஸ் தவறிவிட்டதுமன்றி, தானாகவே உருப்பெற்றுவளரும்பல முற்போக்குக் கட்சிகளைத் தூற்றியும், தாக்கியும், அடக்கியும், அழித் தொழிக்கவே முயன்று, அதில் தோல்வி கண்டு வந்திருக்கிறது.

அந்தப் போக்கால், செய்திப் படங்களில், காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளுக்கு மட்டுமே இடம் தந்து, இதர மாற்றுக் கட்சியினரின் நடவடிக்கைகளை ஆட்சியிலிருப்போர் இருட்டடிப்பு செய்து வந்திருக்கின்றனர்.

இந்த உண்மையை, சட்டசபையில் சினிமா கட்டுப்பாடு மசோதா மீது நடைபெற்ற விவாதத்தின்போது, திராவிடர் இயக்கப் பற்றுடைய தோழர் டி. சண்முகம் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற பெரும்பாலான மக்களின் பிரதிநிதித்துவம் பெற்ற மாற்றுக் கட்சிகளின் நடவடிக்கைகளில் சிலவான மாபெரும் மாநாடுகள் பற்றி செய்திப் படங்களில் துணுக்குகள்கூட திரையிடப்படாதது. காங்கிரஸ் கட்சியின் சுயவிளம்பர எதேச்சாதிகாரப் போக்கையே எடுத்துக் காட்டுவனவாக உள்ளது!

நாட்டு நடப்புகளை மட்டும் அறிவிக்கத்தான் செய்திப் படங்கள் என்றால், நாட்டில் உள்ள நால்வகைக் கட்சியினரின் நடவடிக்கைகளும் இடம் பெற வேண்டுவதே ஜனநாயகப் பண்பாயிருக்க முடியும்.

இனியாவது, சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையிலேனும், ஜனநாயகப் பண்புடன் நடந்துகொள்ளுமாறு மத்திய அரசாங்க சினிமாப்பட இலாகாவிற்கு சென்னை அரசாங்கம் யோசனை கூறுமா? பொறுத்திருந்து பார்ப்போம்!

இந்தியாவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள ரூபாய் நோட்டுகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றுக்கான காகிதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கு மொத்தம் ரூ. 2½ கோடி செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

1954—55-ம் ஆண்டில், இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட வேலை பூர்த்தியான எஃகின் மொத்த அளவு சுமார் 12½ லட்சம் டன் ஆகும்.

விவசாய முறைச் சமூகம் பாதுகாக்கப்பட வேண்டும்

நாட்டின் வளர்ச்சிக்கு விவசாயமே அடிப்படை

"இயற்கையின் தொடர்பிழந்துவிடாமல் வாழ எண்ணினால், இந்தியா தனது விவசாய முறை—சமூக அமைப்பைத் தொடர்ந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்; உலகத்தில் உள்ள வெகுவாக முன்னேறிய நாடுகளின் சரித்திரம் நமக்குச் சொல்வதெல்லாம், எவ்வளவுதான் அவை தொழில் துறையில் முன்னேறியிருந்தாலும்கூட, அவைகளின் அடிப்படை, ஒரு பெரும் விவசாய முறையாகவேதான் இருந்துவந்துள்ளது;

"அமெரிக்காவிலிருந்து உணவுப் பொருள்களை பிரிட்டன் இறக்குமதி செய்து கொண்டிருந்தால், தொழிற் புரட்சியில் ஈடுபட முடியுமா? அமெரிக்காவின் இன்றைய முதன்மைக்குக் காரணம் அதன் விவசாய அபிவிருத்தியும் உணவு உற்பத்தியும்தான்; சோவியத் ரஷ்யாவிலேகூட, அந்த நாட்டின் அடிப்படை ஒரு வளமான விவசாய முறைதான்; அங்கு அண்மையில் நடைபெற்றுள்ள சம்பவங்கள் அந்த நாட்டின் பண்ணை நிர்வாகம் விவசாய அபிவிருத்தி இவற்றைத் திருத்தி அமைக்குமாறு அந்த நாட்டுத் தலைவர்களை கட்டாயப்படுத்தியுள்ளன."

—என்று, டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், அகில இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் பொன் விழாவை டில்லியில் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவில் உணவு உற்பத்தி அதிகரித்துவிட்டதாகவும், தேவையான அளவை அடைந்து விட்டதாகவும் கூறப்படுகிறது; உண்மைதான்; ஆனால், நாம் இந்தச் சபலத்திற்கு அடிமையாகிவிட முடியாது—கூடாது.

"நிச்சயமற்ற, ஏமாற்றக்கூடிய பருவ நிலைகளையும், தொழில்கள் அபிவிருத்தியையும் கணக்கிலெடுத்துக்கொண்டு கவனித்தால், உணவு உற்பத்தியில் நாம் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்பதையும், அசட்டையாயிருந்துவிடக் கூடாது என்பதையும் உணர்ந்து கொள்ள முடியும்.

"இன்று மக்கள் சரியான சத்துள்ள உணவை உட்கொள்ளுகிறார்கள் — தேவையான அளவு கிடைக்கிறது—என்று நாம் கூறிவிட முடியாது; அவர்களுக்குத் தேவையான அளவு நல்ல சத்துள்ள உணவு தர வேண்டியது மிக மிக முக்கியமானதாகும்."

இந்தியாவில் காப்பி உற்பத்தி

சில விபரங்கள்

இந்தியா முழுமையிலும், சென்ற 1953—54-ம் ஆண்டில் மொத்தம் 29,410 டன் காப்பி உற்பத்தி செய்யப்பட்டது.

இவ்வாண்டு (1954—55) மே திங்களோடு முடிவடையவிருக்கும் காப்பி உற்பத்தியின் மொத்த அளவு 24,000 டன்களாக இருக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

இந்தியா முழுமையிலுமாக மொத்தம் 2,46,300 ஏகர் பரப்புள்ள நிலத்தில் காப்பி உற்பத்தி செய்யப்படுகிறது.

மாநில வாரியாகப் பிரித்துக் கூறுமிடத்து, சென்னை மாநிலத்தில் மட்டும் 1,01,923 ஏகர்களிலும், மைசூர் மாநிலத்தில் 91,776 ஏகர்களிலும், குடகு மாநிலத்தில் 50,475 ஏகர்களிலும், திரு—கொச்சி மாநிலத்தில் 1,826 ஏகர்களிலும் உற்பத்தி செய்யப்படுவதாகவும், இவை நீங்கலாக இந்தியாவிலிருக்கும் மற்றெல்லா மாநிலங்களிலுமாக 295 ஏகர்களிலும் உற்பத்தி செய்யப்படுகிறது

கைத்தொழில் அபிவிருத்தி

பல்வேறு மாநிலங்களுக்கு இந்திய சர்க்கார் அளித்துள்ள நிதி உதவிகள் விவரம்

சிறு தொழில்கள், கிராமத் தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக, இந்திய சர்க்கார் மேற்கொண்டு சகாயத் தொகைகளும், கடன்களும் வழங்கியிருக்கின்றனர்.

உலோக வேலையின் அபிவிருத்திக்காக சென்னைக்கு, சகாயத் தொகையாக ரூ 3,938 வழங்கப்பட்டுள்ளது. அத்தொகை, மின்சார பற்ற வைப்பு சாதனமொன்றை வாங்குவதற்காக, கும்பகோணத்திலுள்ள கூட்டுறவு உலோகப் பட்டறையொன்றுக்கு அளிக்கப்படும்.

மத்திய பிரதேசம், பஞ்சாப், மத்திய பாரத், பெப்சு ஆகிய ராஜ்யங்களில், பனை வெல்லத் தயாரிப்புத் தொழிலுக்காக 20 - பயிற்சி நிலையங்களை ஆரம்பித்து வைப்பதற்காக அகில இந்திய காதி, கிராமத் தொழில்கள் போர்டுக்கு, சகாயத் தொகையாக ரூ. 1,46,000 அளிக்கப்பட்டிருக்கிறது.

பனைவெல்ல தயாரிப்புத் தொழிலின் அபிவிருத்திக்காக, பம்பாய்க்கு சகாயத் தொகையாக ரூ. 58,907 கிடைத்திருக்கிறது.

கிராம எண்ணெய் உற்பத்தித் தொழிலுக்காக மத்திய பிரதேசத்துக்கு சகாயத் தொகையாக ரூ. 29,000-ம், கடனாக ரூ. 4,000-ம் வழங்கப்பட்டிருக்கிறது.

நாடு முழுவதிலும், பல்வேறு இடங்களில், நூற்புப் போட்டிகளை ஆரம்பித்து நடத்துவதற்கும், பரிசுகளை வழங்குவதற்கும், மேற்கொண்டு ரூ. 55,900, போர்டுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர, காதி உண்டியல்களை அச்சிட்டு விற்பனை செய்வது சம்பந்தமான வேலையைப் பூர்த்தி செய்வதற்காக போர்டுக்கு ரூ. 5,760 வழங்கப்பட்டிருக்கிறது.

தச்சுத் தொழிலின் அபிவிருத்திக்கான திட்டமொன்றுக்கு மூலதனத் தொகைக்கு ஏற்பாடு செய்வதற்காக, மேற்கு வங்காளத்துக்குக் கடனாக ரூ. 13,200 அளிக்கப்பட்டிருக்கிறது.

கடலூரில் பனைவெல்ல உற்பத்தித் தொழில்

அதன் சேவையைப் பற்றி டில்லி மேல் சபையில் குறிப்பு

"கடலூரில் உள்ள பனைவெல்ல உற்பத்தித் தொழில் சம்பந்தப்பட்ட மத்திய பயிற்சி பள்ளிக்கூடம், அமைப்பாளர்கள், போதனாசிரியர்கள் ஆகியோர்களுக்கான பயிற்சி வகுப்புகளில் இதுவரை 390 பயிர்சியாளர்களுக்கு போதனையும் அனுபவப் பயிற்சியும் அளித்துள்ளது; அப்பள்ளிக்கூடம் பனைவெல்ல உற்பத்தித் தொழில் சம்பந்தமான தொழில் நுட்பத் தகவல்கள், யோசனைகள், அனுபவங்கள் ஆகியவற்றைச் சேகரித்து விநியோகிக்கும் நிறுவனமாகவும் சேவை-செய்து வந்துள்ளது; இந்தப் பள்ளிக்கூடத்துக்காக இதுவரை மொத்தம் சுமார் ரூ. 2,91,900 செலவழிக்கப்பட்டிருக்கிறது," என்று, டெல்லி மேல் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

சென்னை மாநிலத்தில் - - கல்வி நிலையங்கள்

மலபார் மாவட்டத்திலேயே அதிகம்

சென்னை, மார்ச் 31—

சென்னை மாநிலத்தில் சென்ற ஆண்டு இறுதியில், (1954 டிசம்பர் 30-ந் தேதியன்று மொத்தம் 874 உயர்நிலைப் பள்ளிகளும், 57 கல்லூரிகளும் இருந்தன என்று கணக்கிடப்பட்டுள்ளது. மாவட்டவாரியாகப் பார்க்குமிடத்து, மலபார் மாவட்டத்தில் மட்டும் 125 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தனவாம்.

மற்றுமுள்ள நகரங்கள், மாவட்டவாரியாகவும் உள்ள எண்ணிக்கைகள் கீழே தரப்படுகின்றன :—

சென்னை நகரம்: 11 கல்லூரிகள்
மலையாள மாவட்டம்: 6 கல்லூரிகள்
திருச்சி மாவட்டம்: 6 கல்லூரிகள், 70 பள்ளிகள்
நெல்லை மாவட்டம்: 6 கல்லூரிகள், 72 பள்ளிகள்
செங்கற்பட்டு மாவட்டம்: 3 கல்லூரிகள், 36 உயர்நிலைப் பள்ளிகள்
தென்னாற்காடு மாவட்டம்: 1 கல்லூரி, 38 பள்ளிகள்
தஞ்சை மாவட்டம்: 1 கல்லூரி, 64 பள்ளிகள்
மதுரைமாவட்டம்: 5 கல்லூரிகள், 51 பள்ளிகள்
இராமநாதபுரம் மாவட்டம்: 4 கல்லூரிகள், 60 பள்ளிகள்
வட ஆற்காடு மாவட்டம்: 4 கல்லூரிகள், 57 பள்ளிகள்
சேலம் மாவட்டம்: 1 கல்லூரி, 60 பள்ளிகள்
கோவைமாவட்டம்: 5 கல்லூரிகள், 85 பள்ளிகள்
தென் கன்னட மாவட்டம்: 4 கல்லூரிகள், 7 பள்ளிகள்
நீலகிரி மாவட்டம்: 17 உயர்நிலைப் பள்ளிகள்.

மாநிலவாரி மோட்டார் கார்கள் புள்ளி விவரம்

இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்களிலும்தனிப்பட்டோருக்குச் சொந்தமாக 1,55,234 பிளஷர் கார்களும், 38,728 பஸ்களும், 91,125 டிரக்குகளும் போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டிருப்பதாக துணை போக்குவரத்து மந்திரி அழகேசன் அண்மையில் மக்கள் சபையில் தெரிவித்தார். விவரம் வருமாறு :—

மாநிலம்	சொந்தக் கார்கள்	பஸ்கள்	டிரக்குகள்
அசாம்	4728	1317	4577
பீகார்	6783	1417	3978
ம. பி.	4500	1277	3460
பம்பாய்	27315	4511	15061
சென்னை	23227	6128	9319
ஒரிசா	2097	656	2110
பஞ்சாப்	2865	1413	3004
உ. பி.	10112	3975	6119
மே. வ.	27278	8425	25918
ஐதராபாத்	7090	1343	3110
காஷ்மீர்	260	496	1212
ம.பாரத்	2081	541	903
மைசூர்	5590	1063	1630
பெப்சு	1500	802	763
ராஜஸ்தான்	4959	2112	2916
சௌராஷ்டிரா	1966	445	1530
தி.-கொ.	3438	1612	2131
ஆஜ்மீர்	1040	126	198
போபால்	321	80	347
பிலாஸ்பூர்	3	6	4
குடகு	232	86	293
டில்லி	7135	490	1586
இமாசல பிரதேசம்	55	....	30
கட்ச்	270	70	260
மணிப்பூர்	96	12	433
திரிபுரா	40	71	142
விந்திய பிரதேசம்	230	241	368
அந்தமான்	14	6	15

சிந்தனைக்கு!

இவ்வாண்டு ஜனவரியில், பிரிட்டனில், வாரத்திற்கு 17,286 மோட்டார் கார்களும், 6,347 பார வண்டிகளும் உற்பத்தியாயின !

ஜனவரி மாதத்தில் 36,229 கார்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன; இவற்றின் மதிப்பு 1,17,00,000 பவுன்கள். சென்ற ஆண்டு ஜனவரியில் 87,00,000 பவுன்கள் மதிப்புள்ள 26,429 கார்கள்தான் ஏற்றுமதியாயின.

இந்திய கடற்படைக் காரியாலயத்தின் தலைவராக இதுவரையிலும் இருந்துவந்த அட்மிரல் பிசேக்குப் பதிலாக இப்போது முன்னாள் துணை அட்மிரலான கார்லைல் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளாராம். இவர், வருகிற ஜூலைத் திங்கள் தொட்டுப் பதவி ஏற்பார் என்று தெரிகிறது.

கைத்தறி வாழவேண்டுமானல்......

கூட்டுறவுச் சங்கத் தலைவர் தரும் யோசனை

"கைத்தறி நெசவாளர்கள் வாழ வேண்டுமானல் சேலைகளையும், வேட்டிகளையும் நெய்கின்ற தொழில் கைத்தறி நெசவாளரின் தனி உரிமையாக்கப்பட்டுவிட வேண்டும் ;

"கைத்தறித் துணியின் விலை, ஆலைத் துணிகளின் விலையைவிட அதிகம் என்று கூறிவிட முடியாது ; இரண்டரை லட்சம் மக்களுக்கு வாழ்வு தருகின்ற ஆலைத் தொழிலுக்கு ஆதரவு தருவதைவிட, ஒன்றரை கோடி மக்களுக்கு வாழ்வு தரும் கைத்தறியை ஆதரிக்கும் செயல்தான் மனிதப் பண்புக்கு ஏற்றதாகும்."

இவ்வாறு, சென்னை வானொலியில் பேசிய சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தோழர் எம். பி. நாச்சிமுத்து குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது :—

"மாநில முன்னாள் முதலமைச்சர் ஆச்சாரியார், கரை போட்ட வேட்டிகளையும், சாயச் சேலைகளையும் கைநெசவுக்கே ஒதுக்கி, அவற்றை கைநெசவாளர்களின் தனி உடைமையாக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார் ; ஆனல் மத்திய சர்க்காரோ, அதை முழுவதுமாக ஏற்றுக்கொள்ளாமல், ஆலைகள் தங்கள் வேட்டி உற்பத்தியை 100-க்கு 40 சதவிகிதமாகக் குறைத்துக்கொள்ள வேண்டுமென உத்திரவு மட்டுமே செய்தது ; இதனல் கைத்தறித் தொழிலுக்கு உண்மையிலேயே எந்த ஒருவித நன்மையும் கிடைக்கவில்லை."

இவ்வாறு குறிப்பிட்டு மேலும் அவர் பேசுகையில் கூறினர் :—

"இன்னும் 15 அல்லது 20 ஆண்டுகளில் கைத்தறிகளையெல்லாம் விசைத் தறிகளாக்கிவிட வேண்டுமென்பதுதான் அண்மையில் நியமிக்கப்பெற்ற கனுங்கோ குழுவின் சிபாரிசாகும் ; இந்தச் சிபாரிசு அமுலுக்குக் கொண்டு வரப்படுமானல், இந்தியா முழுமையிலும் கைத்தறியே இருக்காது. எனவே, இந்திய சர்க்கார், இதனை அமுல் நடத்துவதானல் அதனல் எவ்வித நன்மையும் கிடைக்காது—கிடைக்கவும் முடியாது."

★

சங்கத் துணைத் தலைவர் கூறும் 10-அம்சத் திட்டம்

மேற்படி சங்கத்தின் துணைத் தலைவரான தோழர் எ. ஜெ அருணசலம் அண்மையில் வானொலியில் பேசுகையில், கனுங்கோ குழு செய்துள்ள சிபாரிசுகளிலிருக்கும் தவருன புள்ளி விவரங்களைச் சுட்டிக்காட்டிவிட்டு, இனி மேல் கைத்தறிதொழிலின் நிரந்தரமான நன்மைக்கான பிரச்சினைகளைத் தீர்க்க மேற்கொள்ள வேண்டிய சில முறைகள் பற்றிக் குறிப்பிட்டார். அவையாவன :—

"36 அங்குலம் முதல் 52 அங்குலம் அகலமுள்ள எல்லா ரக துணிகளையும் கைத்தறிக்கே ஒதுக்கிவிட வேண்டும் ; அப்படியில்லாவிடின், சேலைகளையும், வேட்டிகளையும் கைநெசவுத்தொழிலின் உரிமையாக்கிவிட வேண்டும் ;

"கைநெசவாளருக்குக் குறைந்த விலையில் நூல் கிடைக்கச் செய்வதற்காக மாவட்டங்கள்தோறும் நூற்பு ஆலைகளை நிறுவ வேண்டும் ;

"விசைத் தறிகளுடைய சிறு தொழிற்சாலைகள் அனுமதிக்கப்படக் கூடாது ;

"ஆலைகளில் மேலும் புதுத்தறிகள் வைக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும் ;

"கைத்தறிக்குத் தேவைப்படும் பலவிதமான கருவிகளையும் இலவசமாகவோ அல்லது குறைவான விலைக்கோ நெசவாளருக்குத் தந்து உதவ வேண்டும் ;

"எல்லா நெசவுத் தொழிலாளரும் கூட்டுறவுச் சங்கங்களில் சேர சர்க்கார், அவசியமான எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டும் ;

"வெளிநாடுகளுடன் செய்யப்படும் வர்த்தக ஒப்பந்தங்களில் ஆலைத் துணிகளுக்குத் தருவது போலவே கைத்தறித் தொழிலுக்கும் ஏற்றுமதிக்கு இடந்தர வேண்டும் ;

"சர்க்கார் காரியாலயத் தேவைகளுக்குக் கைத்தறி துணிகளை வாங்கப்பட வேண்டும் ;

"கைத்தறி பற்றிய ஆலோசனையின்போது கைத்தறிக்காரர்களின் பிரதிநிதிகளுக்கு தக்க இடங் கொடுக்கப்பட வேண்டும் ;

"மத்திய, மாநில சர்க்கார்களில் தனியாக கைத்தறி இலாகா ஒன்றினை ஏற்படுத்தி அதை ஒரு தனி அமைச்சரிடம் ஒப்படைக்க வேண்டும்."

மக்கள் சபையில்......

★

தென்னாற்காடு பழுப்பு நிலக்கரித் திட்டம்

விரைவில் இறுதி அறிக்கை ?

"தென்னாற்காடு நெய்வேலியில் துளைபோடும் வேலை, தண்ணீரை வெளியே இறைக்கும் வேலை ஆகியவை சம்பந்தமாக மேலும் சில ஆராய்ச்சி வேலைகள் பூர்த்தியான பிறகு, நெய்வேலியில் பழுப்புக்கரியைத் தோண்டி எடுத்துப் பயன்படுத்தும் பிரச்சினை பற்றிய திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் வேலை கூடிய சீக்கிரம் மேற்கொள்ளப்படும்," என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

"பழுப்பு நிலக்கரித் திட்டத்

(தொடர்ச்சி 5-ம் கலம் பார்க்க)

ஆச்சாரியார் அதிகாரத்தில் இருந்தபோது மந்திரிகள் சுற்றுப் பயணச் செலவு

சென்னை, ஏப். 1—

சென்ற ஆண்டில், ஆச்சாரியார் அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களின் சுற்றுப்பயணத்திற்காக ரூ. 57,000 செலவழிக்கப்பட்டுள்ளதென்ற தகவலை, சென்னை மாநில நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

1953—54-ம் ஆண்டில் சுற்றுப் பயணம் செய்வதற்காக அமைச்சர்கள் வாங்கிய தொகை கீழே தரப்பட்டுள்ளது :—

	ரூ.	அ.	பை.
ஆச்சாரியார்	1,452	8	0
சுப்பிரமணியம்	4,972	15	0
ஷெட்டி	4,667	11	0
வெங்கடசாமிநாயுடு	4,927	12	0
பழனிசாமி கவுண்டர்	3,590	0	0
யு. கிருஷ்ணு ராவ்	2,233	7	0
மாணிக்கவேலர்	5,214	8	0
குட்டிகிருஷ்ணன் நாயர்	2,566	10	0
ராமநாதபுரம் ராஜா	1,326	6	0

(2) ஆறுமாத காலத்திற்குத் தங்கள் சுற்றுப் பயணத்திற்காக கீழ்க்கண்ட அமைச்சர்கள் வாங்கிய தொகை :—

	ரூ.	அ.	பை.
பக்தவத்சலம்	2,594	15	0
ராஜாராம்	2,551	0	0
ஜோதி அம்மாள்	784	12	0
ரங்கா ரெட்டி	3,307	11	0
எம். வி. கிருஷ்ண ராவ்	4,849	13	0
நாகண்ணகவுடர்	4,535	12	0
சங்கர ரெட்டி	2,610	6	0
பட்டாபிராம ராவ்	2,175	13	0
சஞ்சீவய்யா	2,551	0	0

(3) அமைச்சர்களின் 'வீட்டு அலவன்ஸ்' :—

	ரூ.	அ.	பை.
ஆச்சாரியார்	3,000	0	0
சுப்பிரமணியம்	3,000	0	0
வெங்கடசாமி நாயுடு	3,000	0	0
யு. கிருஷ்ணு ராவ்	3,000	0	0
ராமநாதபுரம் ராஜா	3,000	0	0

(4) கீழ்க்கண்ட அமைச்சர்கள் 6-மாத காலத்திற்கு வாங்கிய தொகை :—

	ரூ.	அ.	பை.
பக்தவத்சலம்	1,777	7	0
சங்கர ரெட்டி	1,750	0	0
பட்டாபிராம ராவ்	1,750	0	0
சஞ்சீவய்யா	1,750	0	0
ஜோதி அம்மாள்	1,177	7	0
ராஜாராம் நாயுடு	64	8	0

(5) அவர்களுக்குத் தரப்பட்ட 'கார் அலவன்ஸ்':—

	ரூ.	அ.	பை.
ஆச்சாரியார்	3,000	0	0
ஷெட்டி	3,000	0	0
சுப்பிரமணியம்	3,000	0	0
வெங்கடசாமி நாயுடு	3,000	0	0
பழனிசாமி கவுண்டர்	3,000	0	0
யு. கிருஷ்ணு ராவ்	3,000	0	0
மாணிக்கவேலர்	3,000	0	0
குட்டிகிருஷ்ணன் நாயர்	3,000	0	0
ராமநாதபுரம் ராஜா	3,000	0	0

(6) 6-மாதத்திற்குக் கீழ்க்கண்டுள்ள அமைச்சர்களுக்குத் தரப்பட்டது :—

	ரூ.	அ.	பை.
பக்தவத்சலம்	1,177	7	0
ரங்கா ரெட்டி	1,750	0	0
எம். வி. கிருஷ்ண ராவ்	1,750	0	0
நாகண்ணகவுடர்	1,750	0	0
சங்கர ரெட்டி	1,750	0	0
பட்டாபிராம ராவ்	1,750	0	0
சஞ்சீவய்யார்	1,750	0	0
ராஜாராம்	1,177	7	0
ஜோதி அம்மாள்	1,177	7	0

தமிழகமெங்கும் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்

பெருந்துறை

26—3—55 மாலை 7 மணிக்கு பழைய ஸ்டோர் மைதானத்தில் தோழர் பெ. த. சென்னியப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் சிற்றுளி சுப்பிரமணியம், எஸ். அப்பாவு, மணி பாகவதர், ஈ. புகாரி மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர்.

திருமலாபுரம்

26—3—55 மாலை 7 மணிக்கு தொண்டன் பழனியாண்டி இடவில் தோழர் எம். பெரியசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் கலைமணி, மு. வசனப்பித்தன், கே. எஸ். சந்தானம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மேலப்பாளையம் (நெல்லை)

20—3—55 இரவு 8 மணிக்கு தோழர் நா. சங்கரலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் பாகுதாசன், ச. வீரபாகு, எஸ். கலிங்கன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சீராமபுரம்—பெங்களூர்

27—3—55 காலை 10 மணிக்கு பைந்தமிழ் மன்றச் சார்பில், தோழர் சு. கண்ணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் செல்வராசன், ப. பழமநீ, மூ. தணிகாசலம், ப. நாராயணன், செ விழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நீரம்பூர்

27—3—55 மாலை 7 மணிக்கு, தோழர் தி. கிருட்டிணசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ராமானுசம், மருதமுத்து ஆகியோர் பேசியபின், தோழர் என். வி. நடராசன் தென்னாடு புறக்கணிக்கப்படும் விதத்தை விளக்கிப் பேசினர்.

தென்காசி

20—3—55ல், லஜபதி மைதானத்தில் தோழர் சாகுல் ஹமீது தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அன்பரசு, டி. குருசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கோவிலூர் (மதுரை)

23—3—55 மாலை 6 மணிக்கு வீரபத்திரன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் சி பி. சிற்றரசு, எம் எஸ். ராமசாமி, எஸ். முத்து ஆகியோர் பேசினர்.

ஆரணி (செங்கற்பட்டு)

20—3—55 மாலை 6 மணிக்கு பிள்ளையார் கோயில் அருகாமையில் தோழர் தேவராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பா. சு. மணி. கா உமர், முனுசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

ஆலந்தூர்

20—3—55 காலை $10\frac{1}{2}$ மணியளவில் கழக இல்லத்தில் தோழர் மு. தங்கவேலு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. எஸ் அருணாசலம், வி. ராஜு, திருநாவுக்கரசு, ஆ. வே. ராதாகிருட்டிணன், மற்றும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றினர்.

இராசபாளையம்

20—3—55ல், தோழர் கார்மேகம் தலைமையில் கண்டன ஊர்வலம் (50 சைக்கிள்களுடன்) நடைபெற்றது.

மக்கள் சபையில்.........

(3-ம் கலத்தின் தொடர்ச்சி)

துக்குப் பயன்படுத்துவதற்காக ஒரு கம்பெனிக்குச் சொந்தமான மண்வாரி இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகிய சில இனங்கள், சென்னை சர்க்காருக்கு 1953-ம் ஆண்டில் இரவலாகக் கிடைத்தன; அச்சாதனங்கள் குறிப்பிடத் தக்க காலத்துக்கு நீடித்துத் தேவையாக இருக்குமென்று பின்னர் தெரிய வந்தபோது, மத்திய சர்க்கார், திட்டத்துக்காக அளிக்கும் நன்கொடையாக அவற்றைப் பாவிப்பது மிகவும் உசிதமாக இருக்குமென்று கருதப்பட்டது ; எனவே, அச்சாதனங்கள், அக்கம்பெனியிடமிருந்து மொத்தம் ரூ. 13,48,000-க்கு மத்திய சர்க்காரால் வாங்கப்பட்டு, திட்டத்துக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டன," என்றும் அறிவிக்கப்பட்டது.

காபூல் சம்பவத்தின் எதிரொலி!

'இறக்கிய கொடியை ஏற்றிவைத்து வணங்குக!'

ஆப்கன் சர்க்காருக்கு பாகிஸ்தான் கோரிக்கை

காபூலில் உள்ள பாக். தூதவராலயக் கொடி, ஆர்ப்பாட்டக்காரர்களால் இறக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டதற்கு எதிர் நடவடிக்கையாக கராச்சியிலுள்ள ஆப்கன் கொடியை இறக்கிக் கொள்ளுமாறு பாகிஸ்தான் சர்க்காரிடம் கராச்சியில் உள்ள ஆப்கன் தூதுவர் கூறினாராம்.

இத்தகவலை வெளியிட்ட பிரதமர் முகம்மது அலி, 'நான் அவரிடம், நாய் ஒன்று எங்களைக் கடித்துவிட்டால், நாங்கள் திரும்பவும் நாயைக் கடிப்பதில்லை' என்று கூறினேன்;' என்று பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

ஆப்கன் சர்க்கார், காபூலில் மீண்டும் பாக். தூதுவராலயத்தில் பாகிஸ்தான் கொடியை ஏற்றி வைத்து, இராணுவ அணிவகுப்பு நடத்தி வணக்கம் செலுத்த வேண்டும் என்று ஆப்கான் சர்க்காரை, பாகிஸ்தான் சர்க்கார் கோரியிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஆப்கன் தூதுவர், திரும்பவும் கொடியேற்றி வைப்பது பற்றி உறுதி தரமுடியாவிட்டாலும், விபரங்களை, ஆப்கன் சர்க்காருக்குத் தெரிவிப்பதாகக் கூறியிருக்கிறாராம்.

பாகிஸ்தான் சர்க்கார், ஆப்கானிஸ்தானுடன் கொண்டுள்ள இராஜ்ய உறவுகளை முறித்துக் கொள்வது பற்றி இன்னும் யோசிக்கவில்லை என்றும், ஆனல் இந்தச் சம்பவத்திற்கு ஆப்கன் சர்க்கார் வெறும் வருத்தம் தெரிவிப்பதால் மட்டும் பாக். சர்க்கார் திருப்தியடைந்துவிட முடியாது என்றும் முகம்மது அலி கூறியிருக்கிறார்.

காபூலில் பாகிஸ்தான் தூதுவரான கர்னல் ஏ. எஸ். பி. ஷா, பாதுகாப்பு மந்திரி, மற்றும் பாகிஸ்தான் இராணுவ தளபதி ஆகியோருடன் காபூல் திரும்புவதாகவும் தெரிகிறது.

கர்னல் ஷா, கராச்சி திரும்பும் வரை, கராச்சியில் உள்ள ஆப்கன் தூதுவர், அலுவலாளர்கள் எவரும் காபூல் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

★

காபூல் மீது 10,000 பாகிஸ்தான் பழங்குடி மக்கள் படையெடுப்பு

கராச்சி, ஏப். 3—

காபூல் மீது 'படையெடுக்கும்' நோக்குடன் சுமார் 10 ஆயிரம் பழங்குடி மக்கள் பாகிஸ்தானிலிருந்து புறப்பட்டதாகவும், ஆனல் அவர்கள் எல்லையை அடைந்தபோது தடுத்து நிறுத்தப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில், பாகிஸ்தான் தூதுவராலயத்தின் மீது நடத்தப்பட்ட 'முன் கூட்டியே ஏற்பாடான தாக்குதல்' பற்றி பாக். சர்க்கார் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக பாக். சர்க்கார் அதிகாரிகள் கூறிய உறுதிமொழி கேட்டு அந்தப் பழங்குடி மக்கள் திரும்பினர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

★

தக்க சமாதானம் கூருவிடில்...!

முகமது அலி குறிப்பு

காபூலில் உள்ள பாகிஸ்தான் தூதுவராலயத்தை ஆப்கானிய ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கியது குறித்து பாகிஸ்தான் சர்க்கார் கண்டனம் தெரிவித்திருக்கிறது என்று தெரிகிறது.

பாகிஸ்தான் கொடி அவமதிக்கப்பட்டதற்கும், நாட்டின் பெருமை குலைக்கப்பட்டு தீங்கிழைக்கப் பட்டதற்கும் ஆப்கான் சர்க்கார் தகுந்த சமாதானம் கூருவிடில், பாகிஸ்தான் சர்க்கார் வாளாவிருக்க முடியாது என்றும், இதுபற்றி தகுந்த நடவடிக்கைகளை பாக். சர்க்கார் மேற்கொண்டிருப்பதாயும் பிரதமர் முகம்மது அலி குறிப்பிட்டிருக்கிறார்.

குடியானவர்களை வெளியேற்ருதே!

புதுடில்லி, ஏப். 3—

"இன்றைய இந்தியாவில், குடியானவர்கள் எவரும் அவர்கள் பயிரிட்டுக் கொண்டிருக்கும் நிலங்களிலிருந்து வெளியேற்றப் படக்கூடாது," என்று, பிரதமர் நேரு கேட்டுக் கொண்டுள்ளாராம்.

உடனடியாக நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியது மிக மிக அவசியமான ஒன்று என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நிலப்பிரபுகளுக்கெதிராக நடவடிக்கை!

17 தென்காசி விவசாயிகள் கைது

உழுவதைத் தடுக்க முயன்றனராம்!

தென்காசி, ஏப். 3—

தென்காசி வட்டத்தில் மீண்டும் கிசான் தகராறு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தங்களிடமிருந்த விவசாயிகள், அதிகமான 'வாரம்' கோரியதற்காக அவர்களை விடுத்து வேறு விவசாயிகளைக் கொண்டு நிலத்தை உழ முற்பட்ட இரு நிலப்பிரபுக்களை அவ்வாறு செய்யாதவாறு தடுக்க முற்பட்டதாக பஞ்சாயத்து போர்டு தலைவர் உட்பட 17 பேர் சுந்தரபாண்டியபுரம் கிராமத்தில் போலீசாரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

கைது செய்யப்பட்டவர்கள், சேரன்மாதேவியில் காவலில் வைக்கப்பட்டுள்ளனராம்.

கணவன் மனைவியை பலியிட்டாரு?

சிவலிங்கத்திற்கு மனைவியே தன்னை தியாகம் செய்தாளா?

பூனு, ஏப். 4—

சில தினங்களுக்கு முன்பு இந்நகரையடுத்த காடு ஒன்றில், சிவலிங்கச் சிலை ஒன்றின் முன் காணிக்கை செலுத்தப்பட்ட பெண்ணைப் பற்றிய தகவல்கள் மேலும் சில கிடைத்துள்ளன.

குல்பர்சா என்ற ஐதராபாத் மாநிலத்தில் உள்ள ஊரைச் சேர்ந்தவராம் அந்தப் பெண்மணி.

தேவம்மா ஹனுமந்தா கொங்காடி என்பது அந்த அம்மையின் பெயராம்.

தலையிழந்த முண்டமாக அந்த அம்மையார் சிவலிங்கம் முன்பு காணப்பட்ட நாளிலிருந்து அந்த அம்மையின் கணவரைக் காணவில்லையாம்.

அப்பெண்மணியின் கணவன் தான் அன்றிரவு ஆசாரப்படி பூஜைகள் எல்லாம் நடத்திவிட்ட பிறகு லிங்கத்திற்கு அப்பெண்ணின் உயிரைத் தியாகம் செய்திருக்கவேண்டும் என்று போலீசார் சந்தேகிக்கிறார்களாம்.

'அந்தக் கணவனும்—மனைவியும் சிவபெருமானின் அத்தியந்த (!) பக்தர்கள்,' என்று போலீசாரிடம் வாக்குமூலம் கூறிய 12 கிராமவாசிகள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

தேவம்மா தன் கணவனுடன் சம்பவ தினத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு அந்தச் சிவன் கோவிலுக்கு வந்திருந்தாராம்.

சென்னை சட்டசபையில்....

★

'வசதி அளிக்க' மசோதா வருகிறது?

பூமிதான இயக்கத்தின் கீழ் நன்கொடை அளிக்க சட்டபூர்வமாக வசதி அளிக்க நகல் மசோதா ஒன்று அரசாங்கத்தின் பரிசீலனையிலிருந்துவருவதாக அமைச்சர் பரமேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

உணவு விளையும் நிலங்கள் பாதிக்கப்பட்டது

செங்கல்பட்டு மாவட்டத்தில், 11,805 ஏகர் உணவுப் பொருட்கள் விளையும் நிலங்களும், 2,175 ஏகர் இதர பயிர் வகைகள் விளையும் நிலமும் பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

'பிரச்சினை' பரிசீலனையில்!

குளித்தலை தாலுகாவை இரு கூருக்கி, புதுத் தாலுகாவிற்கு மணப்பாறையைத் தலைமை நகராக்குவது பற்றிய பிரச்சினையை மாவட்ட ரெவினியூ நிர்வாக விசாரணைக் குழு நன்கு பரிசீலித்துள்ளதெனவும், அக்குழு பின்னர் சர்க்காருக்குச் செய்துகொண்டுள்ள சிபாரிசுகள் தற்போது சர்க்கார் பரிசீலனையிலிருந்து வருவதாகவும் அமைச்சர் மாணிக்கவேலர் கூறியிருக்கிறார்.

பஞ்சாயத்துக்கள் எண்ணிக்கை

"சென்ற ஆண்டு மே திங்கள் இறுதியில், சென்னை மாநிலம் முழுமையிலும் 279 முதல் வகுப்பு, 4,709 இரண்டாவது வகுப்புப் பஞ்சாயத்துக்கள் இருந்தன; இவ்வாண்டில் மேலும் 600 புதிய பஞ்சாயத்துக்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது; 26 முதல்வகுப்பு பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்," என்று அமைச்சர் இராமசாமி படையாச்சி தெரிவித்துள்ளார்.

மூடப்பட்ட முதியோர் பள்ளிகள் எண்ணிக்கை

முதியோருக்குக் கல்வி அளிப்பதற்கென நிறுவப்பட்ட இரவுப் பள்ளிகளில் 1384 பள்ளிகள் மூடப்பட்டன என்றும், இதனல் சர்க்காருக்கு ரூ. 85,384 மிச்சம் ஏற்பட்டுள்ளதென்றும் அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலங்கள் எவ்வளவு?

சென்னை மாநிலத்தில் தீர்வை நிர்ணயிக்கப்பட்டுள்ள தரிசு நிலம் 22,07,100 ஏக்கர்கள் இருப்பதாக அமைச்சர் மாணிக்கவேலர் கூறியிருக்கிறார்.

எத்தனை பேர் தெரியுமா?

சென்ற ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தேதி தொட்டு டிசம்பர் திங்கள் இறுதிவரையிலும் நியூயார்க் பருத்தி மீது சூதாட்டமாடிய 2,053 பேருக்கு அபராதம், சிறைவாசம் போன்ற தண்டனைகள் விதிக்கப்பட்டன என்றும், அபராதத் தொகையாக மொத்தம் ரூ. 31,623 வசூலிக்கப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வழிப்பறிக் கொள்ளையர்

சென்ற ஆண்டில், சென்னை மாநிலத்தில் 117 வழிப்பறிக் கொள்ளை நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன என்றும், அவை சம்மந்தமாக 152 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும், மேலும் 47 பேர், இக்குற்றங்களில் ஈடுபட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்பட்டனர் என்றும் அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

எஃகு உற்பத்தி

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், எஃகு உற்பத்திக்காக திட்டவட்டமான லட்சிய அளவாக இதுவரை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை; தற்போதைய மதிப்பீடுகளின்படி, எஃகு உற்பத்தி அளவு அறுபது லட்சம் டன்னுக்கும் அதிகமாகும்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக இறுதி நிலைமை பற்றிப் பூரணமாகத் தெரியாத வரையில், அடுத்த திட்ட கால இறுதிக்குள்ளாக, எஃகு பிரச்சினையில் நாடு சுயநிறைவு நிலைமையை எய்திவிடுமா என்பது பற்றிக் கூறுவது சாத்தியமில்லை," என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தியப் பேரரசுக்கு.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"இதன் பின்னரும், இந்தியாவில் மொழிவழியாக மாநிலங்கள் அமைவதைத் தவிர்க்கவோ, தாமதிக்கவோ அரசாங்கம் முயற்சிக்குமானல், அந்த முயற்சியை முறியடிக்க, நாடு முழுவதும், மக்கள் கிளர்ச்சி செய்வார்கள்,"—என்ற தீர்மானம் ஒன்றை, இங்கு நடைபெற்ற மூன்ருவது அகில இந்திய மொழிவழி மாநில அமைப்பு மாநாடு நிறைவேற்றியுள்ளது.

"மொழிவழி மாநில அமைப்புப் பிரச்சினையை மேலும் ஒத்திப் போடுவது, ஜனநாயக வளர்ச்சிக்கு மிகுந்த ஆபத்தை விளைவிக்கக் கூடியதுமட்டுமின்றி, நாட்டில் நானுவித கலகங்களையும், பேதங்களையும் உண்டு பண்ணும்," என்றும் மாநாட்டில் கூறப்பட்டது.

"மொழிவழி மாநிலம் தேவை என்ற மக்களின் கோரிக்கையை சிதறடிக்கச் செய்யும் நோக்குடன் காங்கிரசும், அரசாங்கமும், மாநில புனரமைப்புக் குழுவிடம், சில பிற்போக்குவாதிகளையும், கோஷ்டிகளையும் சாட்சியம் கூறத் தூண்டியிருக்கின்றனர்" என்றும் மாநாட்டில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அன்று சொன்னது! இன்று நடந்தது!

மேலும் அந்த மாநாட்டில் பேசப்பட்டதாவது:—

"பல ஆண்டுகளுக்கு முன், பெரியார் ராமசாமி, மொழிவாரியாக மாநிலங்களைப் பிரிக்க வேண்டுமெனகோரியபோது, அது விபரீதமான கோரிக்கைஎன்றுகூறி நிராகரிக்கப்பட்டது; ஆனல், மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது," என்று மாநாட்டில் பேசிய, பின்தள்ளப்பட்ட வகுப்புக் குழு உறுப்பினரான என். எம். சாமி என்ற மக்கள் சபை உறுப்பினர் கூறியிருக்கிறார்.

அகில இந்திய மொழிவழி அமைப்பு இயக்கத்தின் தலைவரான டாக்டர் என் எம் ஜெயசூரியா மாநாட்டுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தி ஒன்றில் குறிப்பிட்டிருந்ததாவது:—

"இப்போனுள்ள மாநிலப் பிரிவுகளை அழித்துவிட்டு அவைகளை மொழிவழி அடிப்படையில் ஒன்று சேர்க்கவேண்டும்; நாட்டின் முன்னேற்றத்திற்கு பொருளாதாரப் புனரமைப்பே முக்கியமானதாகும்; இதனை அடைவதற்கு மொழிவழி அமைப்புதான் முக்கியமான வழியாகும்"

மாநாட்டைத் துவக்கிவைத்த, ராஜா ஜங் பகதூர் சிங், "ஆந்திர மாநிலம் அமைந்துவிட்ட பிறகு, மொழிவழி மாநிலங்கள் அமைவதில் சந்தேகமே இருக்க முடியாது," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மாநில எல்லையிலுள்ள விவசாய நிலங்கள் சம்பந்தமாக மரண வரி விதிக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் தரும் பிரரேபணை ஒன்று சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருமணங்கள்

6—4—55 மாலை 5 மணிக்கு, சென்னை, திருவல்லிக்கேணி ஹைரோட், 331-ம் எண்ணுள்ள கோவிந்தசாமி(செட்டியார்) சத்திரத்தில், தோழர் கோ. தாமோதரன்—தோழியர் கோ. மோகன திருமணம், தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ., தலைமையிலும், பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும். தோழர்கள் க. அப்பாதுரை, அ. பொன்னம்பலனர், இறையன்னால், தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் பேசுவர்.

* * *

6—4—55 மாலை 5-30 மணி அளவில், சென்னை, சைதாப்பேட்டை, எண். 129, ஜோன்ஸ் ரோடு, அன்னதான சமாஜ கட்டடத்தில், பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்கள் தலைமையில், தோழர் எம். ஆர். கோவிந்த்—தோழியர் நீலாவதி திருமணம் நடைபெறும். தோழியர் சத்தியவாணிமுத்து சொற்பொழிவாற்றுவார்.

மாநில புனரமைப்பு...

(1-ம பக்கத்தின் தொடர்ச்சி)

மேலும் அவர் கூறினர்:—

"நாட்டை மொழிவழியாகத் திருத்தி அமைக்க, மாநில புனரமைப்புக் குழு பயன்படலாம் என்ற மக்களின் நம்பிக்கையை, குழு, இரகசியமாக விசாரணை நடத்துவது சிதறடிப்பதாகவும் இருக்கிறது; மேலும் குழுவினர், மிக அவசர அவசரமாக, விசாரணையை நடத்தியிருக்கின்றனர்;

"குழு ஓராண்டுக்கும் அதிகமாக வேலை செய்தும், வங்கம்—பீகார், ஆந்திரம்—ஒரிசா, ஆந்திரம்—மத்திய பிரதேசம், சென்னை—திரு-கொச்சி, மகாராஷ்டிரம்—குஜராத் ஆகிய மாநிலங்களுக்கிடையே இருந்துவரும், எல்லைத் தகராறுகள் பற்றிய பிரச்சினையைத் தொடக்கூடவில்லை," என்றும் அவர் குற்றஞ்சாட்டினர்.

1951-ல் இந்தியாவில் உற்பத்தியான கைத்தறித் துணியின் மொத்த அளவு 131 கோடி கஜமாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம்.ஏ.